**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - *641 003*

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: *94890 56730*

தொலைபேசி: *0422 - 6611302*
நிகரி: *0422 - 2431821*
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: *21.01.2026*
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நியூட்ராசூட்டிக்கல் ஆராய்ச்சிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

M/s. Cheenu Herbal Foods பாரம்பரிய சித்தா மற்றும் ஆயுர்வேத அறிவையும் நவீன அறிவியல் ஆராய்ச்சியுடனும் இணைத்து, இரும்புச்சத்து மற்றும் ஹீமோகுளோபின் உயர்த்தும் கலவைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் நியூட்ராசூட்டிக்கல் தயாரிப்புகளை உருவாக்கும் ஸ்டார்ட்அப் நிறுவனம் ஆகும்.

இது தொடர்பாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குனர் முனைவர். ந. செந்தில் மற்றும் M/s. Cheenu Herbal Foods நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர். ராமச்சந்திரன் (ஓய்வு பேராசிரியர்) ஆகியோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் மற்றும் பதிவாளர் முனைவர். கா. சுப்ரமணியன் அவர்கள் முன்னிலையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 20.01.2026 அன்று செய்யப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் நியூட்ராசூட்டிக்கல் மற்றும் செயல்பாட்டு உணவு துறையில் புதுமையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வழிவகுக்கிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**